முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 யூலை

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2024-08-10
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல.* **1.1** *தொடக்கம்* **1.6** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வரும் நீதிமன்றங்களில் எது இலங்கையில் முதன்மையான குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கிறது?

(1) உயர் நீதிமன்றம்
(2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) நீதிவான் நீதிமன்றம்
(4) மாவட்ட நீதிமன்றம்

**1.2** பொருள்கள் விற்பனைக்கான ஒப்பந்தத்தின்படி, பின்வருவனவற்றில் அடிப்படைக் கூறாக (fundamental element) அமைந்திருப்பது எது?

(1) ஒப்பந்த விடயப்பொருளானது பொருள்களாக இருத்தல் வேண்டும்.

(2) விற்பனையாளர் பொருள்களின் உரிமையை கொள்வனவாளருக்கு மாற்றுதல் வேண்டும்.

(3) உடன்படிக்கையானது பண ரீதியான பிரதிபலனுக்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) மேற்கூறிய யாவும்.

**1.3** பின்வருவனவற்றுள் சர்வதேச வர்த்தகத்திலுள்ள நீதித்துறை சாராத தீர்வுகாணும் முறை **அல்லாதது** எது?

(1) இணக்கசபை (Arbitration) (2) மத்தியஸ்த சபை (Mediation)

(3) வர்த்தக சபை (Chamber of commerce) (4) சர்வதேசச் சட்டங்கள். (International laws)

**1.4** மாற்றுண்டியல் ஒன்றின் புறக்குறிப்பிடலுக்கான கீழுள்ள உதாரணம் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது.:

> பற்றுச்சீட்டு கையொப்பமிடப்பட்டால் மாத்திரம்
> பணம் செலுத்துக.
> என்.எஸ். பெரேரா

மாற்றுண்டியலின் மேற்படி புறக்குறிப்பானது :

(1) ஒரு வெற்றுப் புறக்குறிப்பு. (2) ஒரு விசேட புறக்குறிப்பு.

(3) ஒரு நிபந்தனையுடனான புறக்குறிப்பு. (4) ஒரு மட்டுப்பாடான புறக்குறிப்பு.

**1.5** பின்வருவனவற்றுள் ஒப்பந்தமொன்றை முடிவுறுத்துகின்ற ஒரு முறையாக அமைவது எது?

(1) செயற்பாட்டின் மூலம். (2) மீறுதலின் மூலம்.

(3) விரக்தியின் மூலம். (4) மேற்கூறிய யாவும்.

**1.6** பின்வருவனவற்றுள் வார்நாமம் (Bill of lading) தொடர்பில் சரியான கூற்றாக **அமையாதது** எது?

(1) இது கப்பலேற்றப்பட்ட பொருள்களுக்கான ஒரு பற்றுச்சீட்டாகத் தொழிற்படுகிறது.

(2) இது பொருள்களின் அளவு, பருமன் மற்றும் எடையை உள்ளடக்கியுள்ளது.

(3) இது சர்வதேச வர்த்தகத்தில் ஒரு கொடுப்பனவு முறையாகப் பயன்படுத்தப்படுகிறது.

(4) இது பொருள்களின் உரிமையை நிரூபிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** மேன்முறையீட்டு நீதிமன்றமானது அரசியலமைப்பை பொருள்கோடல் செய்கின்ற நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது..

**1.8** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், பொருள்களுக்கு எதிராக விற்பனையாளருக்கு நிவாரணங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

**1.9** காசோலையானது ஒரு மாற்றுண்டியல் அன்று.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** உயர் நீதிமன்றத்தின் (Supreme court) இரண்டு (02) அதிகாரங்களைக் குறிப்பிடுக.

**1.11** ''பொதுக் குறுக்குக் கோடிடல்'' மற்றும் ''விசேட குறுக்குக் கோடிடல்'' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.12** நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் இரண்டு (02) கடமைகளைக் குறிப்பிடுக.

**1.13** CIF உடன்படிக்கையொன்றில் விற்பனையாளரின் இரண்டு (02) பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

**1.14** மாற்றத்தகாத சாதனங்களுக்கு இரண்டு (02) உதாரணங்களைப் பட்டியலிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**பண்டார** என்பவர் தொழில்முறையாக ஒரு சட்டத்தரணியாக இருப்பதுடன் அவர் வெளிநாட்டு விசா ஆலோசனை நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். **பண்டாரவின்** நிறுவனத்தினுடைய வணிகச் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கு **விதேஷிகாவுக்கு** அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அவர்களது ஒப்பந்த ஆவணத்தின் ஒரு பகுதியாக, பிரான்ஸ் தொடர்பாக எவ்வித ஆலோசனைகளை வழங்கவோ அல்லது விசா விடயங்களைக் கையாளவோ வேண்டாம் என **விதேஷிகா** அறிவுறுத்தப்பட்டுள்ளார். ஆனால், **விதேஷிகா** உயர் வீதமொன்றில் பிரான்ஸ் தொடர்பில் **பிராங்** என்பவருக்கு ஆலோசனை வழங்கியதுடன் அவரது விசா பிரச்சினையையும் கையாண்டிருந்தார். துரதிஸ்டவசமாக, **விதேஷிகாவின்** தவறு காரணமாக அது பிழைத்துப் (wrong) போனதால் **பிராங், பண்டாரவிடமிருந்து** நட்டஈடு கோரியுள்ளார். எவ்வாறாயினும் நட்டஈட்டைச் செலுத்த **பண்டார** மறுத்துள்ளார்.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) **பண்டார** மற்றும் **விதேஷிகா** ஆகியோருக்கிடையிலான முகவராண்மை உறவின் தன்மையை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **பிராங், பண்டாரவிடமிருந்து** நட்டஈட்டைக் கோர முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) **A, B, C** ஆகியோர் **ABC பங்குடமையின்** பங்காளர்களாவர். **வரையறுக்கப்பட்ட கூரே கம்பனி** ஆனது **ABC பங்குடமையின்** போட்டி நிறுவனமாகும். பங்காளர் B, **வரையறுக்கப்பட்ட கூரே கம்பனியின்** சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு இலஞ்சம் வழங்கி, அவர்களுடைய சேவைநாடுநர்களின் இரகசியத் தகவல்களைப் பெற்று, அதனை **ABC பங்குடமைக்கு** வழங்கியிருந்தார். **ABC பங்குடமையின்** பங்காளர்களில் ஒருவரால் **வரையறுக்கப்பட்ட கூரே கம்பனியின்** சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு இலஞ்சம் வழங்கப்பட்ட விடயம் அக்கம்பனியின் தலைவருக்குத் தெரியவந்தது. இதனால் கம்பனி, **ABC பங்குடமையின்** அனைத்துப் பங்காளர்களுக்கு எதிராகவும் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

***நீங்கள் செய்ய வேண்டியது :***

இந்த விடயம் தொடர்பாக **ABC பங்குடமையின்** பங்காளர்களர் பொறுப்பினை **ஆராய்க.**

(06 புள்ளிகள்)

(b) இலங்கையில் கம்பனிகளுக்குப் பொருந்தக்கூடிய சட்டமாக இருப்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமாகும். கம்பனி பல்வேறு அம்சங்களைக் கொண்டிருப்பதுடன் சட்ட ஆளுமை என்பது அத்தகைய அம்சங்களில் ஒன்றாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கம்பனி தொடர்பான சட்ட ஆளுமை (Legal personality) எண்ணக்கரு பற்றி **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**மாலினி** என்பவர் புகழ்பெற்ற நாடகத் தயாரிப்பாளரான **பேராசிரியர் காமினி**யின் மனைவி ஆவார். 1985 இல் **பேராசிரியர் காமினி** புகழ்பெற்ற ‘‘பரி – நானா’’ என்ற மேடை நாடகத்தைத் தயாரித்து, அதனைப் பகிரங்கமாக மேடையேற்றியிருந்தார். 2010 இல் **பேராசிரியர் காமினி** காலமாகியதைத் தொடர்ந்து, அவருடைய நாடக வேலைகளை அவரது மனைவி **மாலினி** முன்னெடுத்து வந்துள்ளார். 2015 இல், ‘‘பரி – நானா’’ நாடகமானது க.பொ.த. (உ/தர) சிங்கள மொழிப் பாடத்தில் ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கு கல்வித் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டது. பிரபல சிங்கள பாட தனியார் வகுப்பு ஆசிரியர்களில் ஒருவரான **அனில்** என்பவர், இந்த நாடகத்தின் கதை வசனங்களை ‘‘பரி – நானா’’ என்ற பெயரில் ஒரு புத்தகமாக அச்சடித்து, கணிசமானதொரு விலையில் தனது தனியார் வகுப்பு மாணவர்களுக்கு விற்பனை செய்திருந்தார்.

இந்தப் புத்தகத்தை வெளியிட்டதற்காக **அனில்** இற்கு எதிராக **மாலினி** சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ், பாதுகாக்கப்பட்ட நான்கு (04) புலமைச் சொத்துக்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **அனிலுக்கு** எதிரான சட்ட நடவடிக்கையில் **மாலினி** வெற்றிபெற முடியுமா என்பதை **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**பெரேரா** என்பவர் தனது வீட்டிற்காக **வரையறுக்கப்பட்ட ZZ காப்புறுதிக் கம்பனி**யிடமிருந்து ரூபா 5,000,000/- இற்கும் **வரையறுக்கப்பட்ட AZ காப்புறுதிக் கம்பனி**யிடமிருந்து ரூபா 3,500,000/- இற்குமென இரண்டு தீ அபாயக் காப்புறுதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். பின்னர், மின்சார ஒழுக்கின் காரணமாக அவரது வீடு சேதமடைந்ததுடன் சேதத்தின் நட்டம் ரூபா 1,400,000/- ஆக இருந்தது. இந்த இரு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தும் தலா ரூபா. 1,400,000/- இனை இழப்பீடாகப் பெறுவதற்கு தனக்கு உரித்துள்ளது என **பெரேரா** நம்புகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இரு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தும் தலா ரூபா 1,400,000/- வீதம் இழப்பீடு கோருவதற்கு **பெரேராவுக்கு** உரித்துள்ளதா என்பது பற்றி **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) காப்புறுதி உடன்படிக்கையொன்றின் இரண்டு (02) தரப்பினர்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**மஹாநாம** என்பவர் **திலிப்** என்பவருக்குச் சொந்தமான '**திலிப் மீன் கடை**" க்கு புதிய இறால்களை வாங்குவதற்காகச் சென்றார். கடைக்குச் சென்ற பின்னர், **திலிப் மஹாநாமவிடம்** ஒரு பையில் இறால்களைக் கையளித்து, அந்தப் பையில் உள்ள இறால்கள் புதியவை எனக் கூறியிருந்தார். **மஹாநாம** அந்த இறால்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அவருடைய குடும்பத்தாருடன் சாப்பிட்டிருந்தார். அடுத்த நாள், அவர் உட்பட அவரது குடும்பத்திலுள்ள அனைவரும் நோய்வாய்ப்பட்டிருப்பதை அவர் உணர்ந்து கொண்டார். அவர்களைப் பரிசோதித்த மருத்துவர் நோய்க்கான காரணம் உணவு ஒவ்வாமையே எனக் கூறியிருந்தார். **திலிப்** தனக்கு புதிய இறால்களுக்குப் பதிலாக மிகவும் கெட்டுப்போன இறால்களை விற்பனை செய்திருந்ததை **மஹாநாம** கண்டறிந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **மஹாநாமவுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகள் பற்றி **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், பொருள்களின் இரண்டு (02) வகைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

(A) **சவாரிகா** என்பவர் உலகிலுள்ள 25 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணம் செய்த ஒரு பழக்கமான பயணி ஆவார். இதனால் அவரது கடவுச்சீட்டு குறிப்பிடத்தக்க வகைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. துரதிஸ்டவசமாக, **சவாரிகாவின்** வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றிருந்தது. திருடர்கள் **சவாரிகா**வின் கடவுச்சீட்டு உள்ளிட்ட பல பொருட்களைத் திருடிச் சென்றிருந்தனர். இது பற்றி காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த அதே வேளை, **சவாரிகா** தனது கடவுச்சீட்டைக் கண்டுபிடித்து, திருப்பித் தருபவர்களுக்கு ரூபா 100,000/- வெகுமதி அளிப்பதாக தனது வீட்டு வாயிலில் ஒரு அறிவிப்பை வைக்க முடிவு செய்தார். அவரது கடவுச்சீட்டு விசா விண்ணப்பச் செயன்முறையில் மிகப்பெரிய மதிப்பைக் கொண்டிருப்பதால் அவர் ஐக்கிய இராச்சியத்திற்குக் குடிபெயரத் திட்டமிட்டுள்ளதன் காரணமாக அவர் இதனைச் செய்திருந்தார்.

**பிரிசிந்து** என்பவர் உள்நாட்டு பல்பொருள் அங்காடியான **C-கில்ஸ் சுப்பர்** இல் பணியாற்றும் ஒரு இளம் துப்புரவுத் தொழிலாளியாவார். அவர் கடையின் குப்பைக் கூடையைச் துப்புரவு செய்யும்போது, அக்கூடையிலிருந்து கடவுச் சீட்டொன்றைக் கண்டெடுத்தார். அந்தக் கடவுச் சீட்டின் விபரங்கள் உள்ள பக்கத்தைப் பார்த்தபோது அதில் "**திருமதி கிரிஸ்டோபர் சவாரிகா கொலம்பஸ்**" என்ற பெயர் காணப்பட்டதை **பிரிசிந்து** அவதானித்தார். **சவாரிகா, சீ – கில்ஸ் சுப்பர்** இன் நிரந்தர வாடிக்கையாளர் என்பது **பிரிசிந்துவுக்குத்** தெரியும். அதே தினம் நண்பகல் வேளையில் **சவாரிகா** பல்பொருள் அங்காடிக்கு வந்தபோது, **பிரிசிந்து சவாரிகாவிடம்** கடவுச்சீட்டைக் கையளித்தார். அன்று மாலையில் **பிரிசிந்து** தனது வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் வழியில், **சவாரிகாவின்** வீட்டைக் கடந்து சென்றபோது வீட்டின் வாயிலில் காணப்பட்ட அறிவிப்பைக் கண்டார். அவர் ரூபா 100,000/- வெகுமதியைக் கோரியபோது **சவாரிக்கா** அதனை வழங்க மறுத்திருந்தார். **பிரிசிந்து** தற்போது **சவாரிகாவுக்கு** எதிராக வழக்குத் தொடுக்கவுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **பிரிசிந்துவால் சவாரிகாவுக்கு** எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) வலிதான ஒப்பந்தமொன்றின் நான்கு (04) தேவைப்பாடுகளை **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(B) (a) ***சில்வா, வரையறுக்கப்பட்ட லங்கா எயார் கம்பனி*** என்ற தேசிய விமான சேவை நிறுவனத்தில் அதன் செல்லப்பிராணி கட்டுப்பாட்டு அலகின் ஓர் உறுப்பினராக 2022 பெப்ரவரி 01 ஆந் திகதி இணைந்து கொண்டார். ***வரையறுக்கப்பட்ட லங்கா எயார் கம்பனியின்*** செல்லப்பிராணி கட்டுப்பாட்டு அலகின் உறுப்பினராக, அவர் செல்லப்பிராணி சோதனைகள், மதிப்பீடுகள், விசாரணைகள் போன்றவற்றை மேற்கொள்ளவும் விமானத்தில் உள்ள ''எலிகள்'' போன்ற செல்லப் பிராணிகளைக் கட்டுப்படுத்தவும் ஏற்றவர் என கண்டறியப்பட்டார். தரப்பினரிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க, ***சில்வா, வரையறுக்கப்பட்ட லங்கா எயார் கம்பனி***யின் நன்மைக்காக பணியாற்றக் கட்டுப்பட்டுள்ளார். அவர் அவ்வாறு செய்யத் தவறுவாராயின், கம்பனியால் அவருடைய வேலையை முடிவுறுத்த முடியும். ***சில்வா*** ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 மணிக்கு முன்னர் அலுவலகத்திற்கு வருகை தருதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட வேலை விவரணத்திற்குத் தேவையான அனைத்து செல்லப்பிராணிக் கட்டுப்பாட்டு உபகரணங்களையும், ஏனைய தொடர்புடைய செலவினங்களையும் ***வரையறுக்கப்பட்ட லங்கா எயார் கம்பனி*** வழங்கும்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர், 2024 பெப்ரவரி 29 இல், ***வரையறுக்கப்பட்ட லங்கா எயார் கம்பனி, சில்வாவின்*** சேவையை முடிவுறுத்தியது. இந்தச் சந்தர்ப்பத்தில், தான் கம்பனியின் ஓர் ஊழியர் என ***சில்வா*** வாதிட்டார். எனினும், அவர் ஒரு சுயாதீன ஒப்பந்தகாரர் என ***வரையறுக்கப்பட்ட லங்கா எயார் கம்பனி*** தெரிவித்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வரும் சோதனைகளின் அடிப்படையில், ***சில்வா*** ஓர் ஊழியரா அல்லது ஒரு சுயாதீன ஒப்பந்தகாரரா என்பதை **விபரிக்குக** :

- ஒருங்கிணைப்புச் சோதனை (Integration test).
- கட்டுப்பாட்டுச் சோதனை (Control test).
- உபகரணச் சோதனை (Equipment test). (06 புள்ளிகள்)

(b) ***நஸீர்*** 2016 ஏப்ரல் 01 இல் ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியில் ரூபா 80,000/- சம்பளத்தில் பணிக்குச் சேர்ந்தார். அவர், கம்பனியின் ஓர் ஊழியர் என்ற வகையில் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) மற்றும் ஊழியர் சேமலாப நிதி (EPF) ஆகியவற்றுக்கு உரித்துடையவராவார். அவர், அரசாங்க அமைச்சு ஒன்றில் நிரந்தரப் பணியில் சேர்வதற்காக, 2024 யூன் 30 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தனது இராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார். அவருடைய இறுதி மாதச் சம்பளம் ரூபா 300,000/- ஆக இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) இராஜினாமா செய்யும் நேரத்தில், ***நஸீரின்*** பணிக்கொடை உரித்தினைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(ii) EPF ஐ மீளப் பெறுவதற்கான (withdrawal) ***நஸீரின்*** உரிமை பற்றி **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |